**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 166 /2024**
**வழக்கு சாட்சி. அ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** : | லதா | **வயது** : | 44 /2026 |
| **கணவர் பெயர்** : | கண்ணையா | **தாலுகா** : | அறந்தாங்கி |
| **கிராமம்** : | வல்லம்பக்காடு | **தொழில்** : | விவசாயம் |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**A1, A2, A3, A4 present. Both side Counsel Present.**

**As per Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**தேதி : 16.02.2026**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 01.08.2023 ஆம் தேதி காலை 07.00 மணியளவில் நான் எனக்கு சொந்தமான வயலில் நான் உரம் போட்டுக்கொண்டிருந்தேன். ஆஜர் எதிரிகள் நான்கு பேரும் சேர்ந்து எனது வயலுக்கு அருகில் உள்ள அவர்களது வயலில் தென்னங்கன்னு போட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது ஆஜர் 1 ஆம் எதிரி ரெங்கசாமி அவரது வயலில் நின்று கொண்டு என்னை பார்த்து "தேவிடியா மகளே இங்கே எங்கடி உரம் போட வந்த" என்று அசிங்கமாக பேசினார். உடனே நான் எதுவாக இருந்தாலும் உங்கள் தம்பி வந்தவுடன் பேசிக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். நான் வயலில் இருந்து வயலுக்கு அருகில் உள்ள எங்களது கடைக்கு செல்லும் போது ஆஜர் 4 ஆம் எதிரியான அய்யாவு எதுவாக இருந்தாலும் பார்த்துக்கொள்ளலாம் இவளை அடியுங்கள் என்று, அய்யாவு மகனான மாங்குடி மற்றும் பிரகாஷ்-யிடம் சொன்னார். அப்போது கையில் மாங்குடியும், பிரகாஷ்-ம் அருவாள் மற்றும் மண்வெட்டி வைத்திருந்தார்கள். ஆஜர் 2 மற்றும் 3 எதிரிகள் சேர்ந்து மண்வெட்டி மற்றும் அருவாள் ஆகியவற்றின் பிடியால் எனது நெஞ்சில் அடித்தார்கள். நான் உடனே அழுகொண்டு அந்த இடத்தில் உட்கார்ந்து விட்டேன். அப்போது நான் சத்தம் போட்டவுடன் அருகில் இருந்தவர்கள் வந்துவிட்டார்கள். எங்கள் வயலுக்கு செல்லும் தண்ணீர் குழாயை ஆஜர் 2 மற்றும் 3 எதிரிகள் உடைத்துவிட்டார்கள். பின்னர் எனது கணவர் என்னை அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். நான் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது நாகுடி போலிஸ்சார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று கொண்டனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிஸ்சார் என்னை விசாரித்தார்கள். நடந்த விவரம் பற்றி சொன்னேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

இல்லை.

**மறுவிசாரணை**:

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/–எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 166 /2024**
**வழக்கு சாட்சி. அ.சா.2**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** : | கண்ணையா | **வயது** : | 51 /2026 |
| **தந்தை பெயர்** : | கருப்பையா | **தாலுகா** : | அறந்தாங்கி |
| **கிராமம்** : | வல்லம்பக்காடு | **தொழில்** : | விவசாயம் |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**A1, A2, A3, A4 present. Both side Counsel Present.**

**As per Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**தேதி : 16.02.2026**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 லதா எனது மனைவி ஆவார். கடந்த 01.08.2023 ஆம் தேதி காலை 07.00 மணியளவில் நான் எங்களது வயலுக்கு அருகில் உள்ள எங்களது பெட்டிகடையில் இருந்தேன். எனது சித்தப்பாவிடம் குத்தகைக்கு எடுத்த வயலில் உரம் போடுவதற்காக எனது மனைவி சென்றிருந்தார். அப்போது எனது மனைவியை பார்த்து ரெங்கசாமி எனது சித்தப்பா வீட்டு வயலில் "நீ ஏன்டி தேவிடியா உரம் போடுற நீ என்ன சொத்தை ஆள போறியா" என்று அசிங்கமாக பேசியுள்ளார். அதற்கு எனது மனைவி உனது தம்பி உரம் போடசொன்னதால் நான் உரம் போட்டேன். எதுவாக இருந்தாலும் உனது தம்பியிடம் பேசிக்கொள் என்று சொல்லியுள்ளார். பின்னர் பக்கத்து வயலில் நின்று கொண்டிருந்த அய்யாவு எனது மனைவியை பார்த்து இவளை வெட்டிக்கொள்ளுங்கடா, இவளையும், இவளது கணவனையும் கொன்னா தான் நம்ம வாழலாம் என்று அவரது மகனான மாங்குடியிடம் சொல்லியுள்ளார். அதன் பிறகு மாங்குடியும், பிரகாஷ்-உம் சேர்ந்து கையில் வைத்திருந்த அருவாளை திருப்பி அதன் பக்கவாட்டு பகுதியால் எனது மனைவியின் நெஞ்சு பகுதியில் அடித்துவிட்டதாக எனது மனைவி என்னிடம் சொன்னார். அவர்கள் அடித்தவுடன் எனது மனைவியின் அலறல் சத்தம் கேட்டு நானும், அருகில் இருந்தவர்களும் ஓடி போய் பார்த்தோம். அப்போது ஆஜர் எதிரிகளான மாங்குடியும், பிரகாஷ்-உம் கையில் அருவாளுடன் நின்று கொண்டிருந்தார்கள். எதிரிகள் இருவரும் சேர்ந்து தண்ணீர் குழாயினை உடைத்து தண்ணீர் வெளியே ஓடிக்கொண்டிருந்தது. பின்னர் எனது மனைவியை அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். எனது மனைவி சிகிச்சையில் இருந்த போது மேற்படி நடந்த சம்பவங்களை என்னிடம் கூறினார். போலிஸ்சார் என்னை

விசாரித்தனர் நடந்த விவரம் பற்றி சொன்னார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

இல்லை.

**மறுவிசாரணை**:

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஓம்/—எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**